மாகாணக்கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்
க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021
# Provincial Department of Education Northern Province
# G.C.E.(A/L) Pilot Examination

**மனைப்பொருளியல் II**
**Home Economic II**

**Three Hours**
**Gr -13 (2021)**

**28** **T** **II**

**முதலாம் வினா உட்பட ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. 1. சந்தம் என்பதனால் கருதப்படுவது யாது? அதன் இரண்டு வகைகளும் எவை?
2. மழைநீரைச் சேமிப்பதன் அனுகூலங்கள் இரண்டு தருக.
3. பொறிமுறைச் சமிபாடு மற்றும் இரசாயனச் சமிபாட்டைச் சுருக்கமாகத் தருக.
4. இதய நோய் ஏற்படுவதில் செல்வாக்கச் செலுத்தும் காரணிகள் 2 தருக.
5. வெளிற்றல் என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு வெளிற்றலுக்குப் பயன்படுத்தப்படும் ஒட்சியேற்றி ஒன்று தருக.
6. துணியில் வர்ணம் தீட்டும் முறைகள் 2 குறிப்பிடுக.
7. உள்வாரிச் சுற்றுப்பயணம் என்பதைக் குறிப்பிட்டு அதன் இரு பிரிவுகளையும் தருக.
8. கழிவுப் பொருள் முகாமை என்பதை வரையறை செய்க.
9. பயன்தருதன்மை அற்ற தொடர்பாடலின் பாதகமான விளைவுகள் 2 குறிப்பிடுக.
10. சுய எண்ணக்கரு என்பதை அறிமுகஞ் செய்க.

( 2X10=20 )

02. 1 .கட்டட அமைப்பில் உள்ளகவெளி வடிவமைப்பதன் முக்கியத்துவம் 4 குறிப்பிடுக.
2. வடிவமைப்புக் கோட்பாட்டைக் குறிப்பிட்டு அதில் ஒன்றிணைப்பு எனும் பதத்தினை விளக்குக.
3. நீர் விநியோகச் செலவு அதிகரிப்பதற்கான காரணங்கள் 5 குறிப்பிட்டு விளக்குக.
4. வீட்டு மின்சுற்றில் காணப்படும் **'மிகைச்சுமத்தி சுற்றுடைப்பான்"** இப்பதத்தினை விளக்குக.

(2+4+5+5)

03. 1. பெப்தைட்டு பிணைப்பு என்றால் என்ன?

2. உணவில் அடங்கியுள்ள இரும்புச்சத்தை உடல் அகத்துறிஞ்சுவதை அதிகரிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய விடயங்கள் 4 குறிப்பிடுக.

3. மலச்சிக்கல் நிலைமை உள்ள ஒருவருக்கு ஒருநாள் உணவுப்பட்டியலைத் திட்டமிடுக.

4. உணவு நஞ்சடையும் அடிப்படை முறைகளைக் குறிப்பிட்டு உணவு நஞ்சாதலின் நோயறிகுறிகள். நஞ்சாதலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் என்பவற்றைக் குறிப்பிடுக.

(2+4+5+5)

04. 1. நுண்ணங்கி வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் அகப்புறக் காரணிகள் 4 குறிப்பிடுக.

2. நொதியம் சாராத கபில நிறமாதலின் இரண்டு வகைகளையும் குறிப்பிட்டு விளக்குக.

3. புகையூட்டலின் அனுகூலங்கள் 2 பிரதிகூலங்கள் 2 குறிப்பிடுக.

4. ரெற்றாபெக் பொதியிடு பொருளின் படைவகைகளையும் அப்படை இடுவதன் நோக்கத்தையும் குறிப்பிடுக.

(2+6+4+4)

05. 1. மேசை விரிப்பு விரிப்பதன் பயன்கள் 3 தருக.

2. இயற்கை நார்களில் அடங்கியுள்ள தாவரநார், விலங்குநார், கனியநார் பற்றி விளக்குக.

3. துணிமேற்பரப்பில் அலங்காரவுருக்கள் இடுவதன் அனுகூலம் 5 குறிப்பிடுக.

4. குறும்பாவாடை தைக்கும் ஒழுங்கு முறையைத் தருக.

(3+3+5+5)

06. 1. உணவின் பாதச்சுவடு என்பதனை அறிமுகஞ் செய்க.

2. உணவின் பாதச்சுவட்டினை குறைப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் 4 குறிப்பிட்டு விளக்குக.

3. குழுநிலைச் சுற்றுப்பயணத்திற்கும் மாற்றுச்சுற்றுப்பணத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் 5 குறிப்பிடுக.

. 4. சுற்றுப்பணங்களை நெறிப்படுத்துவோரால் விடுமுறைகாலச் சுற்றுப்பிரயாணப் பொதிகளை முன்வைக்கும் போது அதில் இடம்பெறும் துணைச்சேவைகள் 5 உதாரணத்துடன் குறிப்பிடுக.

(2+4+5+5)

07. 1. கட்டிளமைப்பருவத்தில் ஆண்களில் தோன்றும் துணைப்பாலியல்புகள் 4 குறிப்பிடுக.

2. கட்டிளமைப்பருவத்தினரின் நுண்ணறிவு விருத்தி காரணமாக மேம்படுத்தப்படும் சிந்தனை ஆற்றல்கள் 6 குறிப்பிடுக.

3. கட்டிளமைப்பருவத்தினர் எதிர்நோக்கும் கல்வி சார்ந்த பிரச்சினைகள் 3 குறிப்பிட்டு அப்பிரச்சினை ஏற்படுவதில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகள் 3 குறிப்பிட்டு அவற்றை நிவர்த்தி செய்யும் வழிகளையும் தருக.

4. கட்டிளமைப்பருவத்தினரின் உள ஆரோக்கியத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளான பரம்பரையலகுக் காரணிகள் மற்றும் சூழற்காரணிகளை விளக்குக.

(2+4+5+5)

08. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் நான்கிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1. கட்டிட நிர்மாணிப்பின் வினைத்திறனான திட்டத்தின் செயற்படுதன்மையின் முக்கியத்துவம்.
2. உடற்றொழிற்பாடுகளில் புரதத்தின் முக்கியத்துவம்.
3. துணிவகைகளின் தரத்தை மேம்படுத்தும் செயற்பாடான பொசுக்குதல்
4. சுற்றுலாப்பயணத்தின் மூலம் சமூகத்துக்குக் கிடைக்கும் பயன்கள்.
5. கட்டிளமைப்பருவத்தினரின் சுயஎண்ணக்கரு வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு.

(4+4+4+4)